# 'குழந்தைகள் சுதந்திரமாக கருத்துகளை வெளியிட அனுமதிக்க வேண்டும்'

என். மார்க்கண்டன்

**திண்டுக்கல், ஜூன் 6:** குழந்தைகள் தங்களுடைய கருத்துகளை சுதந்திரமாக வெளியிட திறந்த மனதுடன் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என, காந்தி கிராம பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் என். மார்க்கண்டன் கேட்டுக் கொண்டுள்ளார்.

திண்டுக்கல் அருகே குழந்தைகள் பங்கேற்பு உரிமையை உறுதி செய்யும் கூட்டமைப்பின் சார்பில் வெள்ளிக்கிழமை கருத்தரங்கம் நடைபெற்றது.

இதற்குத் தலைமை வகித்துப் பேசிய சிடா அறக்கட்டளைத் தலைவர் எல். அந்தோணிசாமி, ஐக்கிய நாடுகள் சபை முன்னேற்றம், பாதுகாப்பு, உயிர் வாழ்தல் மற்றும் பங்கேற்பு என்ற நான்கு வகையான உரிமைகளை குழந்தைகளுக்கு வழங்கியுள்ள நிலையில், அதனை நடைமுறைப்படுத்த தமிழக அரசு கிராமங்களிலும், நகரங்களிலும் குழந்தைகள் சபையை உருவாக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசிய முனைவர் என். மார்க்கண்டன் தெரிவித்ததாவது:



குழந்தைகள் உரிமைகளை நிலை நாட்டுவதற்கான ஆலோசனைக் கருத்தரங்கில் பேசுகிறார் காந்தி கிராம பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் என். மார்க்கண்டன்.

சுதந்திரம் பெற்றவுடன் அனைத்துப் பள்ளிகளிலும் குழந்தைகள் பாராளுமன்றம் தொடங்கப்பட்டு, அதில் மாணவர்கள் ஆக்கபூர்வமாகப் பங்கேற்றனர். ஆனால், ஆங்கில வழிக் கல்விமுறை வந்த பிறகு குழந்தைகளின் திறமைகள், சுதந்திரம், சிந்தனை ஆகியவை மழுங்கடிக்கப்பட்டு விட்டன.

இன்றைய குழந்தைகள் பொம்மைகளாக நடத்தப்படுகிறார்களே தவிர சிந்திக்கக் கூடியவர்களாக வளர்க்கப்படவில்லை. அவர்களுடைய பங்கேற்பு முழுமையாக இருக்கும் வகையில், மீண்டும் ஒவ்வொரு பள்ளியிலும் குழந்தைகள் பாராளுமன்றம் அமைக்கப்பட்டு, அதன்மூலம் குழந்தைகள் தங்கள் கருத்துகளை சுதந்திரமாக வெளிப்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கருத்தரங்கில், கூட்டமைப்பின் மாநில அமைப்பாளர் வெர்ஜில் டி. சாமி, வடக்கு மண்டல அமைப்பாளர் சண்முகம், மாநிலப் பொறுப்பாளர் ப்ரீத்தி ஆகியோர் பேசினர்.